**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>I.A.No.04/2023 In O.S.No.102/2022</u>**

1) சின்னம்மாள்

2) முனியப்பன்

3) மணி ..... மனுதாரர்கள்/ வாதிகள்

**//எதிராக//**

1) பொன்னுசாமி

2) அய்யனார்

3) லோகேஷ்வரன்

4) சதீஸ்குமார் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 15.06.2024ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

(1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 2, 3 மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் மகன்கள். 1ம் மனுதாரரின் கணவர் வீரப்பன் 1996ம் வருடம் இறந்துவிட்டதாகவும், தாவா A பட்டியல் சொத்தில் 1ம் மனுதாரரின் கணவர் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு குடிசை அமைத்து வாதிகளுடன் வசித்து வந்ததாகவும், அவர்களது அனுபவத்தை அனுசரித்து தாவா A பட்டியல் சொத்திற்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், A

செட்டியூலுக்கு மேற்கில் தாவா B பட்டியல் காலி இடம் உள்ளது என்றும், மேற்படி காலி இடம் உள்ளது என்றும், மேற்படி காலி இடத்தில் துணி வெளுக்கும் இயந்திரம் வைத்து பயன்படுத்தி வந்ததாகவும், பின்னிட்டு 2, 3 வாதிகள் திருமணமாகி குடும்பம் இருப்பதால் தாவா B அயிட்ட சொத்தில் ஒரு ஓட்டுவில்லை வீடு கட்டியும், A பட்டியலில் இருந்த குடிசையை அகற்றி வில்லை வீடுகள் கட்டியும் வாதிகள் தனித்தனியே வசித்து வந்ததாகவும், A அயிட்ட சொத்தின் சர்வே எண்.1028/26, கதவு எண்.13/276, B பட்டியல் சொத்தின் சர்வே எண்.1028/25, கதவு எண்.13/275.

(2) இந்நிலையில் ஓட்டுவீடுகள் சிதலமடைந்துவிட்டதால் தாவா A அயிட்ட சொத்தில் ஒரு பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடு அமைக்க முயற்சி செய்து வருவதாகவும், 1, 2 பிரதிவாதிகள் மனுதாரர்களின் பெரியப்பா மகன்கள் என்றும், 3, 4 பிரதிவாதிகள் பெரியப்பாவின் பேரன்கள் என்றும், அவர்கள் தாவா சொத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் தள்ளி வசிப்பதாகவும், வாதிகளின் குடும்பத்தினரும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரும் தனித்தனியாக வசித்து அவரவர் குடும்பத்தை கவனித்து வந்ததாகவும், அவர்களுக்கு என்று பூர்வீக சொத்து எதுவும் இல்லை என்றும், இந்நிலையில் பிரதிவாதிகள் 2022ம் வருடம் மே மாதம் ஒன்று சேர்ந்து தாவா சொத்திற்கு வந்து வீண் பிரச்சனைகள் செய்ய முயற்சித்ததாகவும், இதனை பார்த்த ஊர் மக்கள் பிரதிவாதிகளை தடுத்து அனுப்பியதாகவும், பிரதிவாதிகள் மனுதாரர்களை வீடு கட்ட விட மாட்டோம் என மிரட்டி சென்றதாகவும், பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும்,

(3) 17.06.2022 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயன்றதை மனுதாரர்கள் தடுத்துவிட்டதாகவும், எனவே அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியது அவசியம் என்றும், தற்போது A பட்டியல் சொத்தில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஏற்பாடு செய்து கட்டுமான பணி நடைபெற்று வருவதாகவும், மேற்படி பணியை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியானது ரத்து செய்யப்பட்டு விடும் என்றும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா A அயிட்ட சொத்தை பொறுத்த தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டுமென்று கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

(4) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்க குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்**

(5) எதிர்மனுதாரர்கள் தங்கள் பதிலுரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டுமென்றும், மனுவின் பத்தி 2 முதல் 4 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், தாவா A அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதிகளின் கணவர் வீடு கட்டி 40 வருடங்களாக குடியிருந்து வந்ததாகவும், அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், தாவா B அயிட்ட சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதாக சொல்வதும் பொய்யானது. மேலும் தாவா சொத்துக்களின் விலாசத்திற்கு வாதிகளுக்கு ஆதார் அடையாள அட்டை ஏற்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், மனு பத்தி 7 மற்றும் 8 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானதாகும். பிரதிவாதிகள் 17.06.2022 ல் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சித்ததை வாதிகள் தடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை ஆகும். வழக்குரை 12 மற்றும் 13 ல் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை ஆகும்.

(6) தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு பொன்னன் மற்றும் அவரது மகன்கள் அங்கமுத்து, வீரப்பன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அங்கமுத்துவிற்கு பொன்னுசாமி, மணி மற்றும் அங்கப்பன் ஆகிய 3 மகன்கள் என்றும், வீரப்பனுக்கு மணி, பொன்னன் என்ற மகன்கள் உள்ளனர் என்றும், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்கறார் பாகத்தின் மூலம் தாவா B அயிட்ட சொத்தானது அங்கமுத்துவிற்கும், A அயிட்ட சொத்தானது வீரப்பனுக்கும் ஒதுக்கப்பட்டது. அங்கமுத்துவிற்கு இறந்து போன அவரது வாரிசுகளான அங்கப்பன், தாவா B அயிட்ட சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், அவரது அனுபவத்தை அனுசரித்து பட்டா எண்.17 சர்வே எண்.1028/25 அங்கமுத்து பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், தாவா B அயிட்ட சொத்தில் உள்ள வீடு சேதம் அடைந்துள்ளதால் அது

புனரமைக்க பிரதிவாதிகள் முயற்சித்தாகவும், எனவே பிரதிவாதிகள் தாவா B அயிட்ட சொத்திற்கு அருகில் வேறு வீட்டில் குடியிருந்து வருவதாகவும், தாவா B அயிட்ட சொத்தில் வீரப்பனுக்கும் அவரது வாரிசுகளுக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனவே, தாவா B அயிட்ட சொத்தை பொறுத்து வாதிகள் எவ்வித பரிகாரமும் கிடைக்க இயலாது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பதிலுரை தாக்கல் செய்துள்ளனர்.

(7) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

(8) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான ஆவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தாவா A மற்றும் B அயிட்ட சொத்துக்களை மனுதாரர்கள் சேர்த்து அனுபவம் செய்து வருவதாகவும், A அயிட்ட சொத்தில் மனுதாரர்கள் வீடு கட்டி வருவதாகவும், அதை எதிர்மனுதாரர்கள் தடுத்ததால் அவர்களுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு வழங்க வேண்டுமென்று வாதிட்டார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா A அயிட்ட சொத்தானது மனுதாரர்கள் குடும்பத்திற்கு வாய்கறார் பாகம் மூலம் ஒதுக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் தாவா B அயிட்ட சொத்தானது எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை பொறுத்து மனுதாரர்கள் எவ்வித பரிகாரமும் கேட்க இயலாது என்றும் ஆட்சேபனை செய்தனர். இம்மனுவில் தாவா A அயிட்ட சொத்தில் மனுதாரர்கள் வீடு கட்டுவதை தடை செய்யக்கூடாது என்று மட்டுமே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

(9) இம்மனுவில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் பொன்னன் மகன் வீரப்பன் என்பவர் பெயரில் பட்டா எண்.787, சர்வே எண்.1028/26A அயிட்ட சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. ம.சா.ஆ.2 கதவு எண்.13/276 க்கு உண்டான வீட்டுவரி ரசீதுகள். மேற்படி

ரசீதுகள் 2ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 வீரப்பனின் வாரிசு சான்றிதழ். மேற்படி ஆவணத்தின்படி 1 முதல் 3 வாதிகள் இறந்து போன வீரப்பனின் சட்டப்படியான வாரிசுகள் என்பதை அறியமுடிகிறது. ம.சா.ஆ.5 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை. மேற்படி ஆவணத்தில் கதவு எண்.13/276 ல் 1ம் வாதியின் விலாசம் கண்டுள்ளது. அதே விலாசத்தில் 2ம் வாதியின் குடும்ப அட்டையும் உள்ளது. மேற்படி குடும்ப அட்டை ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தில் நாக்கம்மாள் முனியப்பன் என்பவருக்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்கான உத்தரவு. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி வீடானது எந்த சர்வே எண்ணில் கட்டுப்படுகிறது என்பதற்கான எந்த குறிப்பும் இல்லை. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா A அயிட்ட சொத்தில் வாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர்கள் அதில் வசித்து வருகிறார்கள் என்பதை அறியமுடிகிறது. மேற்படி சங்கதியை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

(10) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணமானது பொன்னன் மகன் அங்கமுத்து என்பவர் பெயரில் பட்டா எண்.17 சர்வே எண்.1028/25 ற்கான மனைவரி தோராயப்பட்டா. எ.ம.சா.ஆ.2 அங்கமுத்துவின் வாரிசு சான்றிதழ். அதில் எதிர்மனுதாரர்கள் அங்கமுத்துவின் வாரிசுகள் என்பதை காட்டுகிறது. எ.ம.சா.ஆ.3 புல எண்.1028 ற்கான புல வரைபடம். எ.ம.சா.ஆ.4 பொன்னுசாமி என்பவர் குளித்தலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ குறிப்பு. எ.ம.சா.ஆ.5 27.07.2023 ல் 1ம் எதிர்மனுதாரர், மனுதாரர்கள் மீது கொடுத்த புகாருக்கான மனு ரசீது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா B அயிட்ட சொத்தானது எதிர்மனுதாரர்களின் தகப்பனார் அங்கமுத்து பெயரில் ஏற்பட்டு அவரது இறப்பிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் அவரது வாரிசுகளாக உள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா A அயிட்ட சொத்தில் வீடு கட்டி வருவதாகவும், அதனை தடை செய்துவிட்டால் அரசாங்கத்தில் இருந்து கிடைக்கும் நிதியானது பெற இயலாது என்றும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தடை உத்தரவு வழங்க வேண்டியது அவசியம் என வாதிட்டார். ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா A அயிட்ட

சொத்தை பொறுத்து அவர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், ஆனால் B அயிட்ட சொத்து எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதிடப்பட்டது.

(11) மேலும் தாவா A அயிட்ட சொத்தில் மனுதாரர்கள் வீடு கட்டி முடித்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்களின் பதிலுரை மற்றும் வாதுரையை பரிசீலனை செய்கையில், தாவா A அயிட்ட சொத்தை பொறுத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தாவா A அயிட்ட சொத்தில் மனுதாரர்களுக்கு தொல்லை கொடுத்து வருவதாக சொல்லியுள்ள சங்கதி ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் தாவா B அயிட்ட சொத்தானது எதிர்மனுதாரர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. இந்நிலையில் மேற்படி ஆவணங்களின் உரிமை குறித்து முழுமையான விசாரணைக்கு பின்னிட்டே தீர்வு காண இயலும். தற்போது மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் அனுமதிக்கிற முகாந்திரம் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 25 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-.R.தமிழரசி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி - இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | வீரப்பன் பெயரில் உள்ள மனைவரி தோராயப்பட்டா எண்.787 |
| ம.சா.ஆ.2 | வீட்டுவரி ரசீதுகள் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.3 | வீரப்பனின் வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.4 | வீரப்பனின் இறப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.5 | சின்னம்மாளின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 | நாகம்மாள் முனியப்பனின் குடும்ப அட்டை நகல் |
| ம.சா.ஆ.7 | பிரதம மந்திரி குடியிருப்புத்திட்ட அனுமதி ஆணை |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி - இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | பொன்னன் மகன் அங்கமுத்து பெயரில் உள்ள மனைவரி தோராயப்பட்டா எண்.17 |
| எ.ம.சா.ஆ.2 | அங்கமுத்துவின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | புல எண்.1028 ற்கான புல வரைபடம் |
| எ.ம.சா.ஆ.4 | பொன்னுசாமிக்கு குளித்தலை அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி |
| எ.ம.சா.ஆ.5 | பொன்னுசாமி என்பவர் தோகைமலை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு |

**Sd/-.R.தமிழரசி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**